ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத₂ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத₃ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித₄த்தாம் ஸத₃ா ஹ்ருதி₃ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ அம்பரமும் ॥

*This document** has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ அம்பரமும் ॥

## திருநறையூர் - 3

‡அம்பரமும் பெரு நிலனும் திசைகள் எட்டும்⋆
அலை கடலும் குல வரையும் உண்ட கண்டன்⋆
கொம்பமரும் வட மரத்தின் இலைமேல்⋆ பள்ளி
கூடினான் திருவடியே கூடுகிற்பீர்⋆
வம்பவிழும் செண்பகத்தின் வாசம் உண்டு⋆
மணி வண்டு வகுளத்தின் மலர்மேல் வைகும்⋆
செம்பியன் கோச் செங்கணான் சேர்ந்த கோயில்⋆
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே (1)

கொழுங்கயலாய் நெடு வெள்ளம் கொண்ட காலம்⋆
குல வரையின் மீதோடி அண்டத்தப்பால்⋆
எழுந்தினிது விளையாடும் ஈசன் எந்தை⋆
இணையடிக்கீழ் இனிதிருப்பீர்! இன வண்டாலும்⋆
உழும் செறுவில் மணி கொணர்ந்து கரைமேல் சிந்தி⋆
உலகெல்லாம் சந்தனமும் அகிலும் கொள்ள⋆
செழும் பொன்னி வளம் கொடுக்கும் சோழன் சேர்ந்த⋆
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே (2)

பவ்வ நீர் உடை ஆடையாகச் சுற்றிப்⋆
பார் அகலம் திருவடியாப் பவனம் மெய்யா⋆
செவ்வி மாதிரம் எட்டும் தோளா⋆ அண்டம்
திரு முடியா நின்றான்பால் செல்லகிற்பீர்⋆
கவ்வை மா களிறுந்தி வெண்ணியேற்ற⋆
கழல் மன்னர் மணி முடிமேல் காகம் ஏற⋆
தெய்வ வாள் வலம் கொண்ட சோழன் சேர்ந்த⋆
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே (3)

பைங்கண் ஆள் அரியுருவாய் வெருவ நோக்கிப்⋆
    பருவரைத் தோள் இரணியனைப் பற்றி வாங்கி⋆
அங்கை வாள் உகிர் நுதியால் அவனதாகம்⋆
    அங்குருதி பொங்குவித்தான் அடிக்கீழ் நிற்பீர்⋆
வெங்கண் மா களிறுந்தி வெண்ணியேற்ற⋆
    விறல் மன்னர் திறல் அழிய வெம்மா உய்த்த⋆
செங்கணான் கோச் சோழன் சேர்ந்த கோயில்⋆
    திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே (4)

அன்றுலக மூன்றினையும் அளந்து⋆ வேறோர்
    அரியுருவாய் இரணியனதாகம் கீண்டு⋆
வென்றவனை விண்ணுலகில் செலவுய்த்தாற்கு⋆
    விருந்தாவீர்! மேல் எழுந்து விலங்கல் பாய்ந்து⋆
பொன் சிதறி மணி கொணர்ந்து கரைமேல் சிந்திப்⋆
    புலம் பரந்து நிலம் பரக்கும் பொன்னி நாடன்⋆
தென் தமிழன் வட புலக்கோன் சோழன் சேர்ந்த⋆
    திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே (5)

தன்னாலே தன்னுருவம் பயந்த தானாய்⋆
    தயங்கொளி சேர் மூவுலகும் தானாய் வானாய்⋆
தன்னாலே தன்னுருவில் மூர்த்தி மூன்றாய்த்⋆
    தானாயன் ஆயினான் சரண் என்றுய்வீர்⋆
மின்னாடு வேலேந்து விளைந்த வேளை⋆
    விண்ணேறத் தனி வேலுய்த்துலகம் ஆண்ட⋆
தென்னாடன் குட கொங்கன் சோழன் சேர்ந்த⋆
    திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே (6)

முலைத் தடத்த நஞ்சுண்டு துஞ்சப் பேய்ச்சி⋆
    முதுதுவரைக் குலபதியாக் காலிப்பின்னே⋆
இலைத் தடத்த குழல் ஊதி ஆயர் மாதர்⋆
    இன வளை கொண்டான் அடிக்கீழ் எய்தகிற்பீர்⋆
மலைத் தடத்த மணி கொணர்ந்து வையம் உய்ய⋆
    வளம் கொடுக்கும் வரு புனலம் பொன்னி நாடன்⋆

சிலைத் தடக்கைக் குலச் சோழன் சேர்ந்த கோயில்⋆
    திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே (7)

முருக்கிலங்கு கனித் துவர் வாய்ப் பின்னை கேள்வன்⋆
    மன்னெல்லாம் முன்னவியச் சென்று⋆ வென்றிச்
செருக்களத்துத் திறல் அழியச் செற்ற வேந்தன்⋆
    சிரம் துணிந்தான் திருவடி நும் சென்னி வைப்பீர்⋆
இருக்கிலங்கு திருமொழி வாய் எண் தோள் ஈசற்கு⋆
    எழில் மாடம் எழுபது செய்துலகம் ஆண்ட⋆
திருக்குலத்து வளச் சோழன் சேர்ந்த கோயில்⋆
    திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே (8)

தார் ஆளன் தண் அரங்கவாளன்⋆ பூமேல்
    தனியாளன் முனியாளர் ஏத்த நின்ற
பேர் ஆளன்⋆ ஆயிரம் பேர் உடையவாளன்⋆
    பின்னைக்கு மணவாளன் பெருமை கேட்பீர்⋆
பார் ஆளர் அவர் இவர் என்றழுந்தையேற்ற⋆
    படை மன்னர் உடல் துணியப் பரிமாவுய்த்த⋆
தேர் ஆளன் கோச் சோழன் சேர்ந்த கோயில்⋆
    திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே (9)

‡செம் மொழி வாய் நால் வேத வாணர் வாழும்⋆
    திருநறையூர் மணிமாடச் செங்கண் மாலை⋆
பொய்ம் மொழி ஒன்றில்லாத மெய்ம்மையாளன்⋆
    புல மங்கை குல வேந்தன் புலமையார்ந்த⋆
அம்மொழி வாய்க் கலிகன்றியின்பப் பாடல்⋆
    பாடுவார் வியன் உலகில் நமனார் பாடி⋆
வெம் மொழி கேட்டஞ்சாதே மெய்ம்மை சொல்லில்⋆
    விண்ணவர்க்கு விருந்தாகும் பெருந் தக்கோரே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥